உளி- 1 | ஓசை-81 | பிப்ரவரி-2024 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
✆91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

யுத்தன் - 4
கோ. பாரதிமோகன் - 5
சந்துரு.ஆர்.சி - 6
ரிஸ்கா முக்தார் - 7
மணவை லைவின் - 8
ஷிபானா அஸீம் - 9
கா.ரஹ்மத்துல்லாஹ் - 10
தங்கராஜ் பழநி - 11
ஐ.தர்மசிங் - 12
லாஸ்யா - 13
ச.ஆனந்தகுமார் - 13
பாத்திமா ஹகீமா அமீனுதீன் - 14
இயலிசம் - 15
சௌவி - 16
மா. காளிதாஸ் - 17
யட்சன் - 18
நித்யா - 18
ஆகிஷா - 19
புதுகை விஜய்ஆனந்த் - 20
செ.புனிதஜோதி - 21
ஜெயதேவன் - 22
பூங்கோதை கனகராஜன் - 22
வ.ரா. தமிழ் நேசன் - 23
முகமது பாட்சா - 24
வீரசோழன்.க.சோ. திருமாவளவன் - 25
சுப்பையா கந்தையா - 26
ஜீ.சுமித்ரா - 27
சகா - 28
அ. உமர் பாருக் - 28
மு.முபாரக் - 28
கவிதைச் சிறுவன் - 29
வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் - 30
கதிரவன் வீ - 31
ஜேபி நீக்கிழார் - 31
ராஜாஅபி - 32
சே கார்கவி கார்த்திக் - 33
மகேஷ் சிபி - 33
க. அய்யப்பன் - 34
சங்கரி சிவகணேசன் - 35
யுகயுகன் - 36
எஸ்.பி.வீரப்பன் - 37
தி.கலையரசி - 37
ரகுநாத் வ - 38
மருதம் கெஜலட்சுமி - 39

# எனவே



'என்று' என்றே
முடித்துக் கொண்டிருப்பது
அயர்ச்சி

சட்டென வாசகனைப் பார்த்து
அறிவுரை கூறுவது
அட்டூழியம்

முடிக்க முடியாத போது
'வேறொன்றுமில்லை
அவ்வளவு தான்'
என முடிப்பது
அல்வா கிண்டுவது

எழுதும் கவிதையிலேயே
'கவிதை கவிதை' என
அந்தக் கவிதையையே கிளறுவது
தத்து பித்து முரண்

வரியை மடக்குவது
வாசகனை மடக்குவதாகாது
அது மட்டம் தட்டுவது

இன்னும் சொல்ல இருக்கிறது
சொல்லிக் கொண்டிருப்பது

நிறைய நல்ல வரிகளைக்
கடைசி வரி
சிதைத்து விடுவதால்
முந்தின வரியோடு
முடித்துக் கொள்கிறேன்

**யுத்தன்**

# கஸல்



பார்வையற்ற கண்களுக்கு முன்பானால் என்ன
திரை இறக்கிய மேடையில்
ஊமை நாடகம் இது

வழிமாறுதலில் பழியென்ன நேரப்போகிறது
வீசுதிசையறியா கண்ணற்ற காற்றின் மீது

கனவாக இருக்கலாம் பயணம்
அதையும் பொய்க்கால் குதிரையின்
மீதேற்றியது
எனது விதி

இறுகிக்கிடக்காத இதய பலிக்கு
கூண்டுகள் ஏதுமில்லை
நிறுத்திக்கோரும் நியாயத்திற்கு

சபித்துவிடுங்கள்
கருநாக்கு எவருக்கேனுமிருந்தால்
அழுதபிள்ளைக்குப் பால் எனும் பழமொழிப்
பழுத்த நாவை

அழுது இறைஞ்சுகிற குரலுக்கு
இரங்குவோரையும்
கொலைப்பீடத்தில் தலைகவிழ்த்தும்
இந்தக் காதல்
கல்லின் கருக்குழிக்குச் சூலானது

**கோ. பாரதிமோகன்**



பறக்கும்போதெல்லாம்
அண்ணாந்து பார்த்து
ஆவலாய் எதிர் நோக்குகிறாய்.
ஒவ்வொரு முறையும்
உனக்காக உடல் சிலுப்பி
சில இறகுகளை
உதிர்த்துச் செல்கிறேன்
உனது மெத்தைக்குள்
பத்திரப் படுத்திக் கொள்ளும் நீ
மொத்தமாய் எதிர்பார்க்கிறாய்
சொல்ல விழைந்தும்
ஒன்றை சொல்லாமலே கடக்கிறேன்
எல்லா இறகுகளையும்
ஒரே நேரத்தில்
யாராலும் உதிர்த்துவிட முடியாது என்னிலிருந்து
யாரும் பிடுங்க முடியாத
இறகுகள் என் வசம் உண்டு
ஒருவருக்கும் சொல்லாமல்
உள்ளுக்குள் பொத்தி வைத்த
சில பாவங்களைப் போல்
சதைக்குள் புதைந்திருக்கும்
சில இறகுகளை
இறுதிவரை சுமந்து செல்வேன்

**சந்துரு.ஆர்.சி**



நான்
எனும் கர்வம் மட்டும்
இல்லையெனில்
அன்பின்
சுயநல ஆட்டத்தில்
எப்போதோ நான் தோற்றுப்போயிருப்பேன்

நான்
எனும் கர்வம் மட்டும்
இல்லையெனில்
துரோகத்தின் விசம் தீண்டி
எப்போதோ நான் இறந்திருப்பேன்

நான்
எனும் கர்வம் மட்டும்
இல்லையெனில்
நம்பிக்கையின் பெயரில்
எப்போதோ நான் கழுவிலேற்றப்பட்டிருப்பேன்

நான்
நான் என்பதெல்லாம்
அகந்தைதான்
ஆயினும்
அதுதான்
சமயங்களில்
என்னை
வைராக்கியமாய்
வாழச்செய்கிறது

**ரிஸ்கா முக்தார்**



உன் நினைவுகளற்ற பளிங்கு மண்டபம்
ஏதேதோ உணர்வுகளால் பிரியங்களின்
மணிமேடையாகிறது

அந்த இருளுக்குள் எனது நாட்கள் விடிய
ஆரம்பிக்கிறது

உன் வெளிச்சம் தேவையில்லை
விலகியே இரு

கொஞ்சம் என்னை நானே அனுபவித்துவிட்டு
வருகிறேன்

இப்போது எனக்குள் ஊற்றெடுத்து நிற்கும்
இந்த அன்பு உனக்கானது
மட்டும் அல்ல இந்த முழு உலகிற்கானது

இது இப்போது ஓரறிவுமுதல் ஆறறிவரைக்கும்
சொந்தமானது

எல்லோருக்கும் பகிர விழையும்போது

நீயும் கொஞ்சம் பெற்றுக்கொள் உன் கை
நிறையும் அளவிற்கு

இப்போது நான் முழுமையாக
விடிந்திருக்கிறேன்

நீயும் விடிவாயா நீலா

நீ மறைவு பிரேதேசத்தை நோக்கி நடக்கிறாய்
என் மௌனத்தின் நீளம் அதிகரிக்கிறது

என் பரிசுத்தமான உடலை என்னால்
பார்க்க முடிகிறது

**மணவை லைவின்**



ஒரு பொருள்
இவ்விடத்திலிருந்தால்தான் பொருத்தமென
மாற்றி வைக்கிறேன்
சில நாள்களுக்குப் பின்னர்
மறுபடியும்
பழையபடியே இருக்கட்டுமென
வைத்துவிடுவேன்

யாராவது இப்போது
அழைத்தால் பேசலாமே என்றிருக்கும்
சில நேரங்களில்
வரும் அழைப்புக்களை பேசமனமின்றி
பார்த்துக்கொண்டிருப்பேன்

பல சமயங்களில்
தனித்திருத்தல் நிம்மதியாக இருக்கும்
சில சமயங்களில்
மனிதர்களைத்தேடி ஆலாய்ப்பபறந்து
கொண்டிருப்பேன்

பயணித்துக் கொண்டிருத்தல்
எத்தனை பாக்கியமென்பேன்
சில நாள்களில்
அலைச்சலின்றி வாழ்தல்தான்
எத்தனை ஆசுவாசமென்பேன்

ஒரு சமயத்தில்
மழைக்காக காத்திருக்கிறேன்
பின் வெயிலுக்காக வேண்டி நிற்கிறேன்

சில நேரங்களில்
யன்னல் கதவுகளை திறந்து வைத்திருத்தல்
நல்லதென்கிறேன்
சில நேரங்களில் வேண்டாமென இறுக்கமாய்
தாழிட்டுக்கொள்கிறேன்

இந்த
வாழ்தல்தான் எத்தனை
அழகென்கிறேன்
அவ்வப்போது
இறந்துவிடுதல்தான்
ஆனந்தமென்கிறேன்

ஆனாலும்
எப்போதும் போல்தானிருக்கிறேன்

**ஷிபானா அஸீம்**



விரிந்த மயில்தோகை
அத்தனை அழகு
குழந்தையின் கண்கள்
***
வட்டிப் பணம்
கண்களை மறைக்கிறது
கண்ணீர்
***
ஆலயத்துள் தெய்வம்
யாரும் கண்டுகொள்வதில்லை
தனிமையில் தாய்
***
கையில் செல்போன்
பாதை மாறுகிறது
பைக் பயணம்
***
ஓயாத இருமல்
இன்னும் நிற்கவில்லை
தாத்தாவின் மூச்சு

**கா.ரஹ்மத்துல்லாஹ்**



எனக்கு புரியவே புரியாத
மொழி
உன் மௌனம்...
உன் மௌனத்தை
மொழிப்பெயர்ப்பதென்பது
சாத்தியமற்றது...
உன் புன்னகையையும்
உன் கண்ணீரையும்
உன் மௌனத்திற்குள்
புதைத்து வைத்திருக்கிறாய்...
உன் கோபங்களுக்கும்
சந்தோசங்களுக்குமிடையே
எந்தவொரு வித்தியாசமும்
புலப்படுவதில்லை...
மௌனங்களை தூக்கி திரியும்
என் மொத்த அகராதி நீ...!

**தங்கராஜ் பழநி**



எனக்கென்று
ஒரு வானம் இருந்தது
அப்போது
அருகில் இருந்தார்
அப்பா

எனக்கென்று
ஒரு நிலவு இருந்தது
அப்போது
அருகில் இருந்தார்
அம்மா

அருகில் இருக்கிறார்கள்
பிள்ளைகள்
இப்போது
நான்
வானமாக இருக்கிறேன்
மனைவி
நிலவாக இருக்கிறாள்.

**ஐ.தர்மசிங்**



செவியருகில் உதடுகுவித்து
ரகசியம் சொல்லத்தான் வருகிறாய்
ஒவ்வொரு முறையும்...

சொற்களை விடுத்து
உன் சுவாசத்தை அவதானிப்பதில்தான்
தொடங்குகிறது
என் பிழை..!

**லாஸ்யா**

இப்போது அமைதி அணிந்து
கொண்டிருக்கிறாய்

எவ்வளவோ முயற்சித்தும்
வார்த்தைகளின் தயவில்
கிழிந்து தொங்கிய மனதை
தைக்கவே முடியவில்லையென
பரஸ்பரம் வருத்தம் கொள்கிறோம்..

அடுத்த முறை கவனமாய்
தைத்து விடு..
கிழிப்பதற்கு வன்மம்
நிரப்பிக்களமாடும் நாக்கை..

**ச.ஆனந்தகுமார்**

# நிசப்தத்தின் சப்தம்



இப்போதெல்லாம் அவள்
யாரோடும் அதிகம்
பேசிக் கொள்வதுமில்லை...
யாரோடும் அதிகம்
நேரம் ஒதுக்குவதுமில்லை...

நிரம்பிக் கிடக்கும் குறுஞ்செய்திகளையும்;
அழைத்து சலித்த
அழைப்புக்களையும்
இன்னும் பார்க்காமலேயே
ஒதுக்கி வைத்திருக்கின்றாள்...
அவளுக்குத் தெரியும்...
அதில் பெரிதாய் ஒன்றும்
இருக்கப் போவதில்லை...

ஸ்டேடஸ் போடப்பட்ட ஏதோவொன்றை
“இதனை எனக்கு அனுப்பு”
என்று கேட்டிருக்க போகின்றார்கள்...
இல்லை அதனை வைத்து “உனக்கென்ன
வாழ்கின்றாய்”
என வக்கணையாய்
விமர்சித்திருக்க போகின்றார்கள்...

வேண்டாம்... வேண்டாம்...
அவளே அவளுக்கான ஒற்றை
அறையின் நிசப்தத் தீண்டலில்;
இறை வசனத்தின் இனிமையான
பிண்ணனியில்; தனக்கே தனக்கான வரிகளை
கிறுக்கிக்
கொள்ளும் வெற்றுத் தாளினதும்;
பேனா முனையினதும் வலிமையே
இப்போதெல்லாம் அவளுக்குப்
போதுமாகிப் போய்விட்டது...

ஏன் இப்படி இருக்கின்றாய் என்று
ஒய்யாரமாய் கேள்வி கேட்டு,
விதண்டாவாதம் புரிபவர்களையும்
கூட தன் ஒற்றைப் புன்னகை கொண்டு கடந்து
விடும் பக்குவம் அவளிடம் அதிகமாகவே வந்து
விட்டது...

அவள் மாறித் தான்
விட்டாளா???
இல்லை மாற்றித் தான்
விட்டார்களா???
என்பது கூட அவளுக்கே விடை தெரியாப்
பெரும் புதிர் தான்!!!

**பாத்திமா ஹகீமா அமீனுதீன்**



நான்
கீரை பறிக்கப் போகும்
போதெல்லாம்
கத்திக் கொண்டிருக்கும்
நலம் விசாரிப்பதாக
நினைத்துக் கொள்வேன்
ஊரில் யாவருக்கும் பயம் தான்
அன்று முதல்
பேய்க்குருவியின் குரலில்
சுடலை வாசனை
தீய்ந்து கிடந்த அடுப்பின்
ஓரம் அம்மாவின் உடல்
நலம் என்றபடி சிரிப்பேன்
இன்றும்
அகத்திக்கீரைப் பொரியலில்
அம்மாவின் கைப்பக்குவம் இருக்கும்.

.

**இயலிசம்**



இரவில்
பிசாசுகள் வருமென்று
பயமுறுத்திய தெருவில்தான்
இன்று அரசியல்வாதிகள் வந்தார்கள்
அதே வெள்ளுடைகளோடு

பயமாயிருந்ததால்
பிசாசுகள் வருமெனச் சொல்லப்பட்ட
தெருவில்
இரவில் போனதேயில்லை

அரசியல்வாதிகளென
வெள்ளுடைகளோடு வந்துபோனவர்களை
பிசாசுகள் என்றே
சொல்லிக்கொண்டிருக்கிறாள்
திண்ணைத் தூணில் சாய்ந்தமர்ந்திருக்கும்
பாட்டி

ஏனோ
பிசாசுகளைப் பற்றிய பயம்
அதிகரிக்கிறது

**| சௌவி**



தன்னிருப்பை வெளிப்படுத்த
அதீத பிரயத்தனம் செய்கிறது மௌனம்.

ஒளிந்து விளையாடும் குழந்தையாய்
கதவை லேசாகத் திறந்து
ஒரு புன்னகையைத் தேடுகிறது.

உடைந்து சிதறிய சொற்களை
சாணி உருண்டையால் ஒற்றியெடுக்கிறது.

திடீர் கீறலில் வழியும் குருதியின் மேல்
மஞ்சளை வைத்து அழுத்துகிறது.

நாட்காட்டியைப் புரட்டுவதில்லை
மணிக்கட்டைத் திருப்புவதில்லை
அண்ணாந்து வானம் பார்ப்பதில்லை.

எதையோ கக்கத்தில் செருகியபடி
தாழ்ந்த சாதியாய்
உள்நுழைய
அவ்வளவு தயக்கம் காட்டுகிறது.

மழை வரும்முன் மடித்து வைக்கும்படி
படபடக்கிறது உலர்ந்த மௌனம்.

வெள்ளைத்துணியை வடிகட்டியாக்கி
குடம்குடமாய்ப் பிடித்து வைத்த
மௌனத்தில், இன்றுவரை
ஒரு புழு கூட நெளிந்து கண்டதில்லை.

எத்தனை கல்லெறிந்தாலும்
எத்தனை தவளை குதித்தாலும்
அலையடித்தல் தவிர
வேறொன்றும் அறியாது மௌனம்.

பல முறை கொளுத்தியும் பற்றாத
நமத்துப்போன பட்டாசைக் கூட்டி
யாரோ தீ வைக்க
கொழுந்துவிட்டு எரிகிறது மௌனம்.

சத்தமே இல்லாமல்
அத்தனை வேண்டுதல்களை வைத்தவர்
உள்ளங்கையில் விழும்
ஒரு இணுக்கு விபூதி
மௌனத்தின் சாம்பலே.

**மா. காளிதாஸ்**



சிலுவையில் அறையப்பட்ட அன்பு
அவ்வப்போது உயிர்த்தெழுகிறது
மீண்டும் சில ஆணிகள்
இறுக்கி அறையப்படுகிறது
இதயத்தில் நுழைகிறது
தனிமையின் ஈட்டி
வடிந்தோட கெட்டித்தட்டிப் போன குருதிக்குப்
பழக்கம் இல்லை
வல்லூறுகளின் விருந்துக்கு
பொருத்தமாகவும் இல்லை
ஓநாய்கள் ஓலமிடுவது வாடிக்கை
ஆணிகள் பிடுங்கி எரிய
யாரோ வருவதாகத் தெரிகிறது
அது
உயிர்த்தெழுதலைக்
காண வந்த கண்கள்
அவ்வளவே.

**யட்சன்**

கண்ணீர்த் துளிகளுக்கு
கறுப்புக் கொடி
காட்டவே கண்மை
பூசுகிறோம்....

உள்ளுக்குள் உடைந்திருந்தும்
வெளியே புன்னகைப்பதை
அடிக்கோடிட்டு காட்டவே
உதட்டுச் சாயம் பூசுகிறோம்.....

வலிகளை வெளிக்காட்டாமல்
இருக்கவே வர்ணங்கள்
பல பூசி வாழ்கிறோம்....

ரசிக்காவிடினும்
அழிக்காதிருங்கள்....

**நித்யா**



நீங்கள் பழையதென
தூக்கியெறிந்த
பொம்மையை
குப்பைத்தொட்டியில்
தேடியெடுத்த சிறுமி
அதைத் தன் பொக்கிஷமென
பத்திரப்படுத்தியிருந்தாள்

அழகில்லையென
நீங்கள் கூறிய பூவொன்று
அழகியொருத்தி கூந்தலில்
கர்வமாய் ஏறிக் கொண்டது

அசிங்கமென்று நீங்கள்
கையுதறிய தெரு நாயொன்றுக்கு
ஏதொவெரு வீட்டில்
தங்க இடமும் சில தடவலும்
தினமும் கிடைக்கிறது.

நீங்கள் நினைப்பதைப் போல
உங்கள் நிராகரிப்பொன்றினால்
இங்கு எதுவும் அழிந்து விடுவதில்லை.

நீங்கள் வேண்டாமென
விட்டு வந்த ஆடை
இன்னொருவருக்கு
கச்சிதமாக பொருந்திக் கொள்கிறது

மாறாக,
யாரோவொருத்தரால்
புறக்கணிக்கப்பட்டவைகள்
அனைத்துமிங்கு
எங்கோவொருவரால்
ஆசீர்வதிக்கப்பட்டுக் கொண்டுதான்
இருக்கின்றன.

**ஆகிஷா**




இரவின் சாளரத்தை
மெல்லத் திறக்குதிந்த
அந்தி மாலை

தாமரைத்தடாகத்தில்
வண்டுகளின் பாடலுக்குத்-
தோதாய் பின்னணி இசைத்துக்கொண்டிருக்கும்
நிலவு

இரவல் ஒளி வாங்கிடா
மின்மினிகள் உன்
மூக்குத்தியின் பிரகாசத்தில்
சற்று மயங்குகின்றன

இவ்வளவுக்கும்
இடையில் உன்னுள் மூழ்கும்
நான் மெல்ல மெல்ல
எடையிழந்து போகிறேன்

**புதுகை விஜய்ஆனந்த்**



கனவில் வந்த
சூபி ஆடிக்
கொண்டேயிருந்தார்.

ஒளியையும்,
இருளையும்
ஒளித்து வைத்திருக்கும்
மலர்
காற்றில் ஆடுவதைப்
போலிருந்தது.

"ஏன் ஆடிக்கொண்டேயிருக்கிறீர்கள்?"
என்றேன்.

"ஓயாமல் சுழலும்
பூமியின் கால்களுக்கு
ஓய்வு கொடுக்க வேண்டாமா?"
என்றார்.

அந்த கேள்வி
சிலுவை சுமந்த கர்த்தரையும்
தன் வாயில் உலகத்தைக் காட்டிய
கண்ணனையும் நினைவுபடுத்தியது.

"உன் ஒருவரின்
கருணைக் கண்களால் மட்டும்
எல்லாம் நிகழ்ந்துவிடுமா?"
என்றேன்.

சிறு புன்னகையை பரிசளித்துவிட்டு

என்னிலிருந்து
தொடங்க வேண்டும்
மாற்றம் என்றார்

அந்த ஒற்றை ஒளியில்
என் வீடு
பேரொளியானது

**செ.புனிதஜோதி**



கைநிறைய கடல் நுரையை அள்ளி முகர்ந்து
பார்த்தாள் சிறுமி
இப்போது கடல்
காணாமல் போய்விட்டது
கைநுரைக்குள் நூறு கடல்கள்.

**ஜெயதேவன்**

அலைபேசியின் தொடுதிரையை கைவிரல்
நுனியால் மேலும் கீழுமாக நகர்த்தி
பிடித்த பக்கத்தில்
பார்வை நிலை
கொள்வதைப் போல
பிடித்த நாட்களை நிலை நிறுத்தி
பிடிக்காத நாட்களை தள்ளிவிடத் தெரிந்தவர்கள்
வாழ்கிறார்கள்

**பூங்கோதை கனகராஜன்**



நரம்புகளை மீட்ட, மீட்ட
ஒலி பெருக்கெடுக்கிறது
இசையென.

துளையிடாத
மூங்கில்களுக்குள் இருக்கிறது
இசையின் வடிவானதொரு
புல்லாங்குழல்.

இசைக்கு மொழியில்லை
ஆனால் நிறம் இருக்கிறது.

ஆம்,
இசையின் நிறம்
கருப்பா ? சிவப்பா?
நீலமா?

**வ.ரா. தமிழ் நேசன்**

# மம்மிக்கள் விற்பவன்

.



கடவுள்களை விற்றுக் கொண்டிருந்தவன்
இப்போது
பதப்படுத்திய
மம்மிக்களை விற்கத் தொடங்குகிறான்...
நூற்றாண்டுகளைப் புதைத்துக் கொண்ட
மம்மிக்கள்
புசிப்பதற்கு இலகுவானது.
இதுதான் பாரோவான் மம்மியென்று 10க்கும்
அதிகமாக விற்றதில்
தொழு நோய் பிச்சைக்காரனதும் ஒன்று..
காசுக்குக் குறைவு என்றால்
கை கால் முண்டமென
தனித்தனியாகவும் கிடைக்கும் என்பதுதான்
சலுகை..
கடவுள்களை
யாரும் இப்போது எங்கும் தேடுவதில்லை...
அவர்களை விற்றுத் தீர்ந்தபிறகு
மம்மிக்களே
கடவுள்களாகத்தான் இருக்கிறார்கள்.
.

**முகமது பாட்சா**



இரவுகள் தூவும் நட்சத்திரங்களுக்கு
பாடமெழுதியே வானத்தை நீலமாக்கி
வலசை செல்லும் மனித மனங்களுக்கு
அடுத்தவீட்டு ஆகாயத்திற்கு
பிரபஞ்சம் எழுதி வைத்த
நெருப்புக்கோளங்களால்
சூரிய கதிரின் சுடரை பிய்த்து போட
நிலாத்துண்டுகள் நாட்களாகி
முப்பதாம் நாளிற்கு
முந்தானையோடு தயாராகிறது
பிறைகள் இடும் கோலத்தின் ஊர்வலம்
இரவுகளை எழுத
கடல் நீரை கையில் அள்ளி பார்க்க
ஒழுகிக் கொண்டிருந்தது வாழ்க்கை!!!

**வீரசோழன்.க.சோ. திருமாவளவன்**

# கள்ளன் பயறு



இரவில் மொட்டை மாடியில்
களைகட்டிப் போனது
அந்த விழாக்கொண்டாட்டம்

பெரிதாக மின்னொளிகள் தேவைப்படவில்லை
நிலா அதற்கு பொறுப்பேற்றிருந்தது
பொலிவூட்டும் தோரணையை
கண்ணடித்து கண்ணடித்து
சமிக்ஞை செய்து மகிழ்ந்தவண்ணம்
விண்மீன்கள் கவனித்துக்கொண்டன

சிறப்பாக விழா முடிந்த பின்னரும்
எனக்குத்தான் அந்த ஐயம்
கடைசி வரை தீராதேயிருந்தது
மேலே எல்லா நட்சத்திரங்களும்
மினுக்கி மினுக்கி
ஆர்ப்பரித்த வேளையில்
விழாவைப்புறக்கணிக்கும் முகமாக
ஓரிரண்டு நட்சத்திரத்தோற்ற உலகங்கள்
தேமேயென்று சிமிட்டாதிருந்தன
அவை எந்தெந்தக்கிரகங்கள் என்றுதான்
எனக்குத் தெரியவில்லை

**சுப்பையா கந்தையா**



தீ சுடுமென்று சொல்லுமுன்பே
அது ஒளியென்று
சொல்லிவிட்டு அணைந்துபோகிறது...

சீதை தீக்குளித்ததாய்
நீங்கள் சொல்லிக்கொண்டு
இருக்கையிலே
இராவணனை
தூய்மையுடையவனாய்
நிரூபித்தவண்ணம்
சீதையை
அணைத்துக்கொள்கிறது
பெருந் தீ....

எண்ணங்கள்
தர்க்கம் செய்யும்
சண்டையிடும்போது
அறத்தை உணர்த்தியபடி
உறுதியோடு உரத்து
தீர்ப்புச்சொல்லும்...

சுடுமென்ற தீ தான்
ஒளியூட்டுகிறது
அடர்ந்த இருளுக்கும்....ஃ

**ஜீ.சுமித்ரா**



உங்கள் கண்களுக்கு
நேராகத் தெரிந்த ஒன்று
என் கண்களுக்கு
கோணலாகத் தெரிய
வாய்ப்பு உண்டு தானே...!?
அப்படியானால்,
சரியும் தவறும்
முரண்பட்டு தானே நிற்கிறது
அவரவர் விழிகளில்
அவரவர் பார்வையில்...

**சகா**

மண்ணை வாரி வீசி
அதிவேகமாக கடக்கும் மணல் லாரி
ஆற்றின் சாபமாகக் கூட இருக்கக்கூடும் .

**அ. உமர் பாருக்**

நான்
அழுகின்ற போது
எனக்காய்
அழவில்லையென்பதில்
எந்த வருத்தமுமில்லை...
அழுமென்னை மேலும் மேலும்
அழவைக்கிறீர்கள்!

**மு.முபாரக்**



சற்றும் எதிர்பாராமல் வந்து
பாதி நனைத்துப் போன மழையாகத்தான் உன்
அன்பு என்னில் ...
உலர உலர மீண்டும் நனைய துடிக்கிறது ...

பூவின் இதழ்களின் அடிப்பகுதியும்
கோபுரச் சிலைகளின் விரலிடுக்கிலும் ...
மலைமுகட்டின் சிறு துவாரத்திலும் ...

இன்னும் ஏராள இடங்களோடு நனையாமல்
இருக்கிறது இந்த சின்னஞ்சிறு வானம்
கொடுத்த
துளிமழை ..
என்னிதயமும் இதுபோல உனது
பொழிவுக்காய் வேண்டுதல் செய்து கிடக்கிறது

உள்ள கோயில்கள் போகட்டும்
நீயும் நானும் வாழ்ந்து கிடக்க
நம் உள்ளக் கோயிலுக்கு மட்டும் கொஞ்சம்
கருணை காட்டு போதும் ..

**கவிதைச் சிறுவன்**



எந்த விவாதத்திலிருந்தும்
ஏதேனுமொரு புள்ளியில்
விடைபெற்றாக வேண்டும்
எல்லா விவாதங்களும்
முறையே முற்றுப்பெறுவதில்லை
முற்றுப்புள்ளிவைக்க
எவரும் விரும்பாதபோது
கறையான் புற்றென
நீண்டுகொண்டேயிருக்கும் விவாதத்தை
சட்டென முறிப்பதற்காகவே
“இன்னொரு நாள் தொடர்வோமே”
“ஒருத்தரைப் பார்க்கப் போகணும்”
இப்படி ஏழெட்டு வரிகளை
முதலுதவிப் பெட்டிக்குள்
எப்போதும் வைத்திருக்கிறேன்...
விவாதத்திலிருந்து விலகுவதென்பது
புறமுதுகு காட்டுவதல்ல
மீண்டும் முகம் பார்க்கையில்
புன்னகைக்க உதடுகள்
சங்கடப்படக்கூடாதென்பதற்காக...
ஒரு கைகுலுக்கல்
ஓர் அரவணைப்பு
அத்தனையும்
அந்நியப்படக்கூடாதெனும்
பேரன்பின் நிமித்தமும் இருக்கலாம்...
ஆம்
முற்ற விடாதீர்கள்
மலராக இருக்கும்போதே
விடைபெறுங்கள் விவாதத்திலிருந்து... <3

-

**| வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்**



சிதையில் எரிந்து கொண்டிருந்த அம்மா சற்று
எழுந்து அமர்ந்தாள்
தாமதமாக வரும் பிள்ளைக்கு சாப்பாடு எடுத்து
வைக்கும் ஞாபகம் வந்ததோ

**கதிரவன் வீ**

ஆலோபிளாக்குகளும்
சாலோபிளாக்குகளும்
வந்தபோதிலும்
இன்னும்
வேம்புவின் கீழ்
மூன்று செங்கல்களில்தான்
காட்சியளிக்கிறார்
நண்பனின் கடவுள்

**ஜேபி நீக்கிழார்**



இருளினை தின்று
தீர்த்துக்கொண்டிருக்கும்
அந்த மெழுகுவர்த்திக்கு
ஒருபொழுதும் தெரியப்போவதில்லை
அதன் செரிமானமெல்லாம்
தன் உயிர்தான் என

இடமாறா கிளைகளின்
வண்ணங்களை
சிறு இலையின் ஈரம்
கலைத்துவிட்டு உதிர்வதைப்போல
அவ்வப்பொழுது பிம்பங்களின்
உரையாடலும் கனவுகளை
எழுப்பியபடியே மறைகிறது

எந்த வீணையும் அதன்
இசையினை இரசித்தபடி உறங்குவதில்லை
சிறகில்லா காத்தாடியின்
உசுரெல்லாம்
உடனிருக்கும் நூலினை பொறுத்தே
சுவாசிக்கும்

சில சமயம்
நம்பிக்கைகூட அப்படித்தான்

**ராஜாஅபி.**

# புள்ளியிலிருந்து கோடுவரை




எனது முகவரியின்
மனதிற்கு பல கிழித்தெறிந்த
கடிதங்கள்தான் பஞ்சு மெத்தை
யாரெல்லாம்
எழுதியிருந்தாரோ
நன்றாக இருக்கிறாயா' என்ற வார்த்தை
முகத்தை மறைத்து
கண்கலங்காதே' எனும் வார்த்தை
எனது கண்களை நனைத்து
எப்போது காண்போம்' எனும் வார்த்தைகள்
எனை பலகாலம்
பின்னோக்கி தள்ளியது
தென்றல் நகர்த்தி சுகமளிக்கிறது
பிரியாவிடையுடன்' எனும் சொல்...

**சே கார்கவி கார்த்திக்**

எனக்கு அவ்வளவாக உடன்பாடில்லை
நம்பிக்கையுமில்லை
ஆனால் அவன் பேச்சில்
ஒரு இதமிருக்கிறது  கவர்ச்சியுமிருக்கிறது
கேட்பதற்கும் நன்றாகயிருக்கிறது
பல பொய்கள் பேசி
என்னை இலகுவாக்கிவிடுகிறான்
எனக்கு கொஞ்சமும் தொடர்பில்லாத
நற்குணங்களை
என் குணங்களாக  பட்டியலிடுகிறான்
வெட்கமின்றி ஆம் என்பதாக தலையாட்டிக்
கொள்கிறேன்
சப்தமின்றி மனதிற்குள் சிரித்துக்கொள்கிறேன்
என்னிடம் நானே கேட்டுக்கொள்கிறேன்
கொஞ்ச நேரம் கிளி ஜோசியம்
பார்ப்பதில் என்ன தவறிருக்கிறது

**மகேஷ் சிபி**



அன்றைய தினம் நடக்கும்
சடங்கு சம்பிரதாயங்களுக்கு
நீதான் கதாநாயகனாக இருப்பாய்
அன்றைய தினம் உன்னைச்சூழ்ந்து
உறவுகளும் குடும்பமும் நின்று
உனக்காக ஓவென அழும்
கண்ணீர் வடிக்கும் ஒப்பாரி வைக்கும்
இரண்டொரு நாளுக்கு
நீதான் பேசுபொருளாகவே இருப்பாய்
உன் அருமை பெருமைகளை
சற்றே மிகைப்படுத்தி
பேசித்தீர்ப்பார்கள்....
அவர்களின்
மிகைப்பேச்சில்
பெரிதாய் மயங்கி
இரண்டொரு நாள்
அவர்களையே சுற்றிச்சுற்றி
உழன்று கொண்டு இருக்கும்
உன் ஆத்மா
அதன் பிறகு அவர்களாகவே
உன்னை ம(து) றந்து
அவரவர் வேலைகளை
கவனிக்க தொடங்கி விடுவார்கள்
அப்போது தான் பெரிதாக
எதுவும் இல்லை என்பதை உணர்ந்து
தானாகவே உன் ஆத்மா
சாந்தி அடைய சென்று விடும்.

**க. அய்யப்பன்**



எப்படிக் கொண்டாடுவது
மரணவாடையை சுமந்து வந்த
மழையை
சித்தம் தின்று போன
நீர்மையின் நெருப்பை..

இதுவரை நனைத்த மழையின்
இனிமை எல்லாம்
ஆழமாய் வலித்துப்போகிறது,
இதுவரை சிலிர்த்த தேகம்
இப்போது அனலெனக் கொதிக்கிறது..

இவ்வளவு
குரூரமான நிராதரவுக்குள்ளும்
நிர்வாண மௌனங்களை
போர்த்திக் கொண்டு,
காலம் மீதான நம்பிக்கைப்
பிரேரணையாய்,
அவர்கள் இன்னும் இருக்கிறார்கள்..
கடவுள்தான் களவு போயிருந்தார்..

**சங்கரி சிவகணேசன்**



இரயிலோடும் அலைவில்
மெல்லூஞ்சலாடிக் கொண்டிருந்தார் அவர்.

செல்ல மகளுக்குத்
தலைவாறும் கவனத்தோடு
கையிலிருந்த ஆப்பிளை
சீவிக் கொண்டிருந்தவர்கையில்
முழு நிலவு வந்தமர்ந்தது.

நிலவினைத் வகிர்ந்து
பிறைகளாக்கினார்

கண்களால் புசித்துக்கொண்டிருந்த
எதிர் இருக்கைச் சிறுமியிடம்
இரு பிறைகளை நீட்டினார்

தாயின் கண்கள் சிறுமியின்
கடிவாளங்களை இழுக்கவே.
மறுதலிப்போடு முகம்
திருப்பிக் கொண்ட சிறுமியின் முன்
நிலவின் துண்டுகள் இருளேறின

நிராகரிக்கப் பட்ட அன்பின்
அடங்காக் கசப்பை வாயிலிட்டு
மென்று விழுங்கத் துவங்கினார்
அவர்.

**யுகயுகன்**



உனக்கான கவிதைகள் அனைத்தும்
முற்றுப் பெறாதவை!
அவை எதிலும்
முழுமையான நீ இல்லை!
அவை எதிலும்
முழுமையான உண்மையும் இல்லை!
ஆழ்கடல் அமைதியாய்
காதல் கனிந்திருக்க
கூச்சலிடும் அலைகளாய்
அந்தந்த நேரத்து உணர்வுப் பிரவாகம்!
மனமெங்கும் உன் நினைவுகள்
நிரம்பித் தளும்பும் போது
சிதறி விழும் வார்த்தைக் கோவை!
பேரன்பையும் பெருங்காதலையும்
எவனாலும் எழுதித் தீர்க்க முடியாது!
உன்னை நானும்!

**எஸ்.பி.வீரப்பன்**

காதல்
சாக்லேட் போல இனிக்கும்போது
அதற்கான ப்ரயத்தனங்கள்
நிறையவே கசக்கின்றன தேவதா...
மரணத்தின் துயரை
அசை போட்டுச் செரிக்க நேரம் தராமல்
அமிழ்த்தும்
சாங்கியங்களுக்கு நிகரானவை அவை.
சடங்குகளை விரும்பாத
நம் வெளியில்
உன்னை எனக்கும்
என்னை உனக்கும் பரிமாறி
சுவை நிறைந்த நஞ்சாகவும்
சுவையற்ற அமிர்தமாகவும்
சாகாவரம் தருகிறது
காதல்.

**தி.கலையரசி**

# யானையவன்



குட்டி ஞமலியென
வாலாட்டி
முன்னங்கால்களில்
பணிந்தாலும்
காதைத்திருகி
நெஞ்சை மிதித்தே
ஏறியமர்கிறார் பாகன்
பெறும் காசுகளை
மடியில் திணித்தாலும்
முதுகில் பாய்கின்றன
அந்தக் கோதண்டராமனின்
அங்குச அம்புகள்
இருந்தும்
கட்டியணைத்து தூக்குகையில்
அத்தனை இலாவகம்
அவனிடத்தில்!

**ரகுநாத் வ**



எங்கள் ஊருக்கென்று
தென்பெண்ணை என்றொரு
நதி இருக்கிறது

எங்கள் ஊருக்கென்று ஒரு ஏரியும் இருக்கிறது

எங்கள் ஊருக்கு பொதுவாக
ஒரு கிணறும் இருக்கிறது

எங்கள் ஊரில் எல்லோரது வீட்டிலும்
நான்கு புறமும் கற்சுவர்
அமைக்கப்பட்ட கிணறு இருந்தது

கிணற்றின் நான்கு புறமும்
இரும்பு தோண்டி தண்ணீரை
சுமந்தபடி அமர்ந்திருக்கும்

கண்ணீரும் கலகலப்பான சிரிப்பொலியையும்
நிறைய சேகரித்து வைத்திருக்கும்
அவ்வளவும் வளையல் கரங்களின் ஆதார
தொகுப்புகள்

எங்கள் ஊருக்கு ஒரே ஒரு பஸ் நிறுத்தம்
மட்டுமே இருந்தது

அந்த ஒரு பஸ் மட்டுமே போய்
வந்துக்கொண்டிருக்கும்

காலப்போக்கில் ஆங்காங்கே
செங்கல் சூளைகள் முளைத்தன

எங்கள் அடையாளமான
பனைமரங்கள் அறுக்கப்பட்டன
கல்தூண் கிணறுகள்
காணாமல் போனது
ஓலை வீடுகள்
ஓட்டு வீடுகளாக...

ஓட்டு வீடுகள்
மெத்த வீடுகளாக
உருமாற்றம் பெற்றது

ஒரே ஒரு இட்லி கடை மட்டுமே
இருந்த ஊரில்
பேருக்கொரு கடையும்
வண்ண வண்ண திண்பண்டங்களின்
அலங்கார அணிவகுப்புகள்

சனிக்கிய மறந்து பேனா
பிடித்தவர்கள்
ஊரை விட்டு வெளியேற
உறவுகள் வெட்டு பட்டது
கால்நடைகளை மறந்து
புகை கக்கும் வாகனங்கள்
இடம் பிடித்த வாசல்கள்
சுருங்கி போனது
வீட்டின் நான்கு புற சுற்றுச்சுவர்கள்
வாழ்வியல் முறையை
தனித்தீவாக்கியது

கலாச்சார மாற்றம் என
கூப்பாடு போட்டே
எங்கள் ஊரும்
இப்படித்தான் நகரமாக
மாறிக்கொண்டிருக்கிறது

**மருதம் கெஜலட்சுமி**

படைப்பு

சென்னையின் மைய பகுதியில்

# படைப்பு அரங்கம்

## Facilities

- Capacity 90 to 100 (Members)
- AC Hall
- POP with Profile Lights
- Tea/Coffee snacks place
- Projector

இலக்கிய நிகழ்வுகளுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்




முகவரி

படைப்பு குழுமம்
#3, Ground Floor,
Ajantha Tower,
Corporation Colony Street,
Kodambakkam, Chennai
Opp: R2 Police Station

+91 73388 97788 / 73388 47788